கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



சின்னவேடம்பட்டி பகுதி,
கோவை வடக்கு மாவட்டம்.



சுல்தான்பேட்டை கிழக்குப் பகுதி,
கோவை தெற்கு மாவட்டம்.



நந்தா நகர் பகுதி,
கோவை மாநகர் மாவட்டம்.



நங்கவள்ளி பேரூர்,
சேலம் மேற்கு மாவட்டம்.



நம்பியூர் பேரூர்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



நாமக்கல் ஒன்றியம்,
நாமக்கல் கிழக்கு மாவட்டம்.



கண்ணங்குடி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



குருவிகுளம் வடக்கு ஒன்றியம்,
தென்காசி வடக்கு மாவட்டம்.



சேத்துப்பட்டு பேரூர்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



ஜவ்வாதுமலை வடக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



குன்றத்தூர் தெற்கு ஒன்றியம்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.



குடியாத்தம் தெற்கு ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.

மனுக்கள் — புகார்களை ஏற்றுக் கொள்வதில்

## நீதிமன்றம்போல தேர்தல் ஆணையம் செயல்பட முடியாது!

### முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தகவல்!

சென்னை, ஆக. 12 – மனுக்கள் – புகார்களை ஏற்றுக்கொள்வதில் நீதிமன்றம் போல தேர்தல் ஆணையம் செயல்பட முடியாது என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

இந்திய தேர்தல் ஆணையம் நீதிமன்றம் கிடையாது என்றும், மனுக்கள் மற்றும் புகார்களை ஏற்றுக்கொள்வதில் நீதிமன்றத்தைப் போல் தேர்தல் ஆணையம் செயல்பட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையம் என்பது நியாயமான மற்றும் சுதந்திரமான முறையில் தேர்தல்களை நடத்தும் நிர்வாக அமைப்பு என்றும் ப.சிதம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கக் கோரும் மனுக்கள் தொடர்பாக முடிவெடுப்பதில் மட்டுமே, விதி எண் 20இல், 3வது 'பி' பிரிவை தேர்தல் ஆணையம் பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சட்டமன்றத் தொகுதி முழுவதும் நடைபெற்ற மிகப்பெரிய முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டு மீது முடிவெடுப்பதில் இந்த விதியை



தேர்தல் ஆணையம் பயன்படுத்த முடியாது என்றும் ப.சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

பீகாரில் வாக்குச்சாவடி முகவர்களின் புகார்கள் ஏற்கப்படுவதில்லை என, 'தி இந்து' ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தமும், புகார்களைப் புறக்கணிப்பதும் ஜனநாயகத் தேர்தல்களின் மரணத்திற்கு வழிவகுக்கும் என்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் இந்திய தேர்தல் ஆணையம் கடமைப்பட்டுள்ளது என்றும் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.



நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வஹாப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று நெல்லை மத்திய மாவட்ட அண்ணா அறிவகத்தை (District Firewall ) துவக்கி வைத்தார்.நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் சூர்யா வெற்றி கொண்டான்,சுப.சீதாராமன், மாலைராஜா,பெருமாள், விஜிலா சத்யானந்த் ,முத்துச்செல்வி,முருகன், கோ.ராமகிருஷ்ணன், ராஜு, சுரேஷ், கிரிஜா குமார், தினேஷ்,பிரபு பாண்டியன், சுதா மூர்த்தி, சுப்பிர மணியன், அண்டன் செல்லத்துரை, துபாய் ஷாகுல், சையது முகைதீன்,சாமுவேல், அன்பழகன்,அருள்மணி,பிரான்சிஸ், மேகை செல்வம்,கந்தன்,வில்சன் மணித்துரை,கருப்பசாமி கோட்டையப்பன்,ஜெகநாதன், பேச்சியம்மாள்,சகாய ஜுலியட் மேரி, சபி அமீர் பாத்து,ராஜேஸ்வரி, காசிமணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்புவனம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திருப்புவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஒன்றிய செயலாளர் வசந்திசேங்கைமாறன் தலைமையில் நகரச் செயலாளர் நாகூர்கனி முன்னிலையில் கழக நிர்வாகிகள் அமைதி ஊர்வலம் சென்று கலைஞரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ, மாவட்ட பிரதிநிதிகள் ராராமலிங்கம், ஈஸ்வரன், சுப்பையா, வெங்கடேசன், பாலகிருஷ்ணன், ஒன்றிய அவை தலைவர இளங்கோவன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ரவி, ராமு, ஒன்றிய பொருளாளர் சக்தி முருகன், மாவட்ட தொழிலாளர்கள் துணை அமைப்பாளர் மணிகண்டன், நகர துணைச் செயலாளர் மீனாட்சிசுந்தரம், கிழக்கு ஒன்றிய இளைஞரனி அமைப்பாளர் அறிவுகரசு, நகர் இளைஞர் அணி அமைப்பாளர் கவுன்சிலர் கண்ணன். மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ராஜா, மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு துணை அமைப்பாளர் ரவிச்சந்திரன், மாவட்ட மீனவரின் துணை அமைப்பாளர் அண்ணாமலை, தேளி கோபால். தொ.மு.ச. பிச்சை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள், காளிதாஸ், கணேஷ் பிரபு, கணேசன், ராஜா, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் பாண்டியர் கிருஷ்ணன், தகவல் தொழில் நுட்ப அணி புவனேஸ்வரன், பாரி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.